ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 10.9 – புள்ளுருவாகி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 10.9 – புள்ளுருவாகி

‡ புள் உரு ஆகி நள் இருள் வந்த ⋆
பூதனை மாள ⋆
இலங்கை ஒள் எரி மண்டி உண்ணப் பணித்த ⋆
ஊக்கம் அதனை நினைந்தோ ⋆
கள் அவிழ் கோதை காதலும் ⋆
எங்கள் காரிகை மாதர் கருத்தும் ⋆
பிள்ளை தன் கையில் கிண்ணமே ஒக்கப் ⋆
பேசுவதெந்தை பிரானே ! ‖ **10.9.1** ‖

மன்றில் மலிந்து கூத்து வந்தாடி ⋆
மால் விடை ஏழும் அடர்த்து ⋆
ஆயர் அன்று நடுங்க ஆனிரை காத்த ⋆
ஆண்மை கொலோ அறியேன் நான் ⋆
நின்ற பிரானே ! நீள் கடல் வண்ணா ! ⋆
நீ இவள் தன்னை நின் கோயில் ⋆
முன்றில் எழுந்த முருங்கையில் தேனா ⋆
முன் கை வளை கவர்ந்தாயே ‖ **10.9.2** ‖

ஆர் மலி ஆழி சங்கொடு பற்றி ⋆
ஆற்றலை ஆற்றல் மிகுத்துக் ⋆
கார் முகில் வண்ணா ! கஞ்சனை முன்னம் ⋆
கடந்த நின் கடுந்திறல் தானோ ⋆
நேர் இழை மாதை நித்திலத் தொத்தை ⋆

நெடுங்கடல் அமுதனையாளை ⋆
ஆர் எழில் வண்ணா ! அங்கையில் வட்டாம் ⋆
இவள் எனக் கருதுகின்றாயே ‖ **10.9.3** ‖

மல்கிய தோளும் மான் உரி அதளும் ⋆
உடையவர் தமக்கும் ஓர் பாகம் ⋆
நல்கிய நலமோ நரகனைத் தொலைத்த ⋆
கரதலத்தமைதியின் கருத்தோ ⋆
அல்லி அங்கோதை அணி நிறம் கொண்டு வந்து ⋆
முன்னே நின்று போகாய் ⋆
சொல்லி என் நம்பீ ! இவளை நீ உங்கள் ⋆
தொண்டர் கைத் தண்டென்ற ஆறே ‖ **10.9.4** ‖

செரு அழியாத மன்னர்கள் மாளத் ⋆
தேர் வலங்கொண்டவர் செல்லும் ⋆
அரு வழி வானம் அதர் படக் கண்ட ⋆
ஆண்மை கொலோ அறியேன் நான் ⋆
திருமொழி எங்கள் தேமலர்க் கோதை ⋆
சீர்மையை நினைந்திலை அந்தோ ⋆
பெரு வழி நாவற் கனியினும் எளியள் ⋆
இவள் எனப் பேசுகின்றாயே ‖ **10.9.5** ‖

அரக்கியர் ஆகம் புல் என வில்லால் ⋆
அணி மதிள் இலங்கையார் கோனைச் ⋆
செருக்கழித்தமரர் பணிய முன் நின்ற ⋆
சேவகமோ செய்ததின்று ⋆
முருக்கிதழ் வாய்ச்சி முன் கை வெண் சங்கம் கொண்டு ⋆
முன்னே நின்று போகாய் ⋆

எருக்கிலைக்காக எறி மழு ஓச்சல் ⋆
என் செய்வதெந்தை பிரானே ! ‖ **10.9.6** ‖

ஆழியந் திண் தேர் அரசர் வந்திறைஞ்ச ⋆
அலை கடல் உலகம் முன் ஆண்ட ⋆
பாழியந் தோள் ஓர் ஆயிரம் வீழப் ⋆
படை மழுப் பற்றிய வலியோ ⋆
மாழை மென் நோக்கி மணி நிறம் கொண்டு வந்து ⋆
முன்னே நின்று போகாய் ⋆
கோழி வெண் முட்டைக்கென் செய்வதெந்தாய் ! ⋆
குறுந்தடி நெடுங்கடல் வண்ணா ! ‖ **10.9.7** ‖

பொருந்தலன் ஆகம் புள் உவந்தேற ⋆
வள் உகிரால் பிளந்து ⋆
அன்று பெருந் தகைக்கிரங்கி வாலியை முனிந்த ⋆
பெருமை கொலோ செய்ததின்று ⋆
பெருந் தடங்கண்ணி சுரும்புறு கோதை ⋆
பெருமையை நினைந்திலை பேசில் ⋆
கருங்கடல் வண்ணா ! கவுள் கொண்ட நீராம் ⋆
இவள் எனக் கருதுகின்றாயே ‖ **10.9.8** ‖

நீர் அழல் வானாய் நெடு நிலம் காலாய் ⋆
நின்ற நின் நீர்மையை நினைந்தோ ⋆
சீர் கெழு கோதை என் அலதிலள் என்று ⋆
அன்னதோர் தேற்றன்மை தானோ ⋆
பார் கெழு பவ்வத்தார் அமுதனைய ⋆
பாவையைப் பாவம் செய்தேனுக்கு ⋆

ஆர் அழல் ஓம்பும் அந்தணன் தோட்டம் ஆக ⋆
நின் மனத்து வைத்தாயே ॥ **10.9.9** ॥

‡ வேட்டத்தைக் கருதாதடி இணை வணங்கி ⋆
மெய்ம்மை நின்றெம் பெருமானை ⋆
வாள் திறல் தானை மங்கையர் தலைவன் ⋆
மான வேல் கலியன் வாய் ஒலிகள் ⋆
தோட்டலர் பைந்தார்ச் சுடர் முடியானைப் ⋆
பழ மொழியால் பணிந்துரைத்த ⋆
பாட்டிவை பாடப் பத்திமை பெருகிச் ⋆
சித்தமும் திருவொடு மிகுமே ॥ **10.9.10** ॥

அடிவரவு — புள்ளுரு மன்றில் ஆர் மல்கிய செரு அரக்கியர் ஆழி பொருந்தலன் நீர் வேட்டத்தை திருத்தாய்

புள்ளுருவாகி முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்